# தேச பக்தி

DHESA BAKTHI

நடுநிலை காலை நாளிதழ்

RNI.No.TNTAM/2022/86012

ஆசிரியர் : G. ராஜா 9842364068 இணைஆசிரியர் : R. கண்ணன் 9994422779

★மலர்:05 ★இதழ்:145 ★25.09.2026 ★தமிழ் நாளிதழ் ★வெள்ளிக்கிழமை ★பக்கம்-4 ★விலை.ரூ.5/- சென்னை

★Volume:05 ★Issue:145 ★25.09.2026 ★TamilDaily ★Friday ★Page-4 ★Price-₹5/- Chennai




## "எல்லா காய்ச்சலுக்கும் Dolo 650 வேண்டாம் காய்ச்சல் வந்ததா? Dolo 650 உடனே வேண்டாம்"

ராணிப்பேட்டை மாவட்டத்தில் டெங்கு காய்ச்சலை பரப்பும் ஏடிஸ் கொசுக்கள் வீடுகள் மற்றும் சுற்றுப்புறங்களில் தேங்கும் சிறிதளவு தண்ணீரில்கூட இனப்பெருக்கம் செய்யக்கூடும். எனவே பொதுமக்கள் தங்கள் வீடுகள் மற்றும் சுற்றுப்புறங்களில் கொசுப்புழுக்கள் உற்பத்தியாகும் வகையில் தண்ணீர் தேங்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

குறிப்பாக பேரல்கள், தேவையற்றபிளாஸ்டிக் பொருட்கள், பயன்படுத்தப்படாத பாத்திரங்கள், தேங்காய் மட்டைகள், டயர்கள், குடுவைகள், உரல்கள், செடி தொட்டிகள், மூடப்படாத நீர்த்தேக்க தொட்டிகள் உள்ளிட்ட பொருட்களில் மழைநீர் மற்றும் பிற நீர் தேங்காமல் அவற்றை அகற்றவோ அல்லது மூடி வைக்கவோ வேண்டும். வீடு மற்றும் சுற்றுப்புறங்களை வாரத்திற்கு ஒருமுறை முழுமையாக ஆய்வு செய்து, தேங்கியுள்ள தண்ணீரை அகற்றி, கொசுப்புழு உற்பத்தியைத் தடுக்க வேண்டும். ராணிப்பேட்டை மாவட்டத்தில் காய்ச்சல் பாதிப்பு ஏற்படும் பொதுமக்கள் தாங்களாகவே மருந்தகங்களுக்குச் சென்று காய்ச்சலுக்கான மருந்துகளை வாங்கி உட்கொள்ளாமல், அருகிலுள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையம், அரசு மருத்துவமனைக்கு சென்று முறையான மருத்துவ ஆலோசனை பெற்று சிகிச்சை பெற வேண்டும்.

காய்ச்சல் ஏற்பட்டவுடன் குறிப்பாக Dolo650 போன்ற காய்ச்சல் குறைக்கும் மாத்திரைகளை மருந்தகங்களில் தாமாக வாங்கி உட்கொள்வதைத் தவிர்க்க வேண்டும். காய்ச்சலுக்கான காரணத்தை மருத்துவர்கள் பரிசோதித்து உரிய சிகிச்சை அளிப்பது அவசியமாகும்.

மாவட்டத்தில் தினந்தோறும் 60க்கும் மேற்பட்ட காய்ச்சல் கண்டறியும் முகாம்கள் நடத்தப்படுகின்றன. அவற்றில் காய்ச்சலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஒரு நாளைக்கு சுமார் 140 இரத்த மாதிரிகள் சேகரிக்கப்பட்டு பரிசோதிக்கப்படுகின்றன. அவற்றில் டெங்கு உறுதி செய்யப்பட்டவர்களுக்கு உரிய நேரத்தில் சிகிச்சை அளிக்கப்பட்டு அந்நபரை டெங்குவிலிருந்து பாதுகாக்கப்படுகின்றனர்.

ஊராட்சி, பேரூராட்சி மற்றும் நகராட்சி அமைப்புகளின் மூலம் டெங்கு கொசுப்புழு ஒழிப்பு நடவடிக்கைகள் மற்றும் தினசரி கொசு மருந்துகள் காலை மற்றும் மாலை நேரங்களில் அடிக்கப்படுகின்றன.

பொதுமக்கள் தங்களை சுற்றியுள்ளவர்களுக்கு காய்ச்சல் ஏற்பட்டாலோ அல்லது அப்பகுதியில் காய்ச்சல் பாதிப்பு அதிகமாக இருந்தாலோ மருத்துவ முகாம் தேவைப்பட்டால் 9940975986 என்ற அலைபேசி எண்ணுக்கு தொடர்பு கொள்ளவும்.

கழிவுநீர் கால்வாய்கள் மற்றும் நீர்த்தேக்க இடங்களில் அதிகமாக நீர் தேங்கி காணப்பட்டாலோ அல்லது பேரல்கள். தேவையற்ற பிளாஸ்டிக் பொருட்கள், பயன்படுத்தப்படாத பாத்திரங்கள், தேங்காய் மட்டைகள், டயர்கள், குடுவைகள், உரல்கள், செடி தொட்டிகள், மூடப்படாத நீர்த்தேக்க தொட்டிகள் காணப்பட்டாலோ அதனை அகற்ற 91417227176 மற்றும் 91417227196 என்ற அலைபேசி எண்ணுக்கு தொடர்பு கொள்ளவும்.

"காய்ச்சல் ஏற்பட்டால் சுயமருத்துவம் வேண்டாம்; உடனடியாக மருத்துவ ஆலோசனை பெறுவோம். கொசுப்புழு உற்பத்தியாகும் இடங்களை அகற்றி டெங்குவைத் தடுப்போம்" என ராணிப்பேட்டை மாவட்ட பொதுமக்களுக்கு மாவட்ட ஆட்சியர் திருமதி.ந.ப்ரியா ரவிச்சந்திரன் இ.ஆ.ப., அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## மதுராந்தகம் தொகுதியில் வாகன சோதனை மூலம் ரூ.14 லட்சம் பறிமுதல்

மதுராந்தகம் சட்டப்பேரவை தொகுதியின் இடைத்தேர்தலில் பறக்கும்படையினரின் வாகன சோதனை மூலம், இதுவரையில் ரூ.14 லட்சம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக தேர்தல் நடத்தும் அலுவலர்தெரிவித்துள்ளார்.



செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் சட்டப்பேரவை தொகுதிக்கு இடைத்தேர்தல் வரும் அக்.6ம் தேதி நடைபெற உள்ளது.

இதனால், தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் கண்காணிப்பு மற்றும் சோதனை பணிகளை மேற்கொள்வதற்காக 9 பறக்கும் படை குழுக்களும், 9 நிலையான கண்காணிப்பு குழுக்களும், 2 காணொளி கண்காணிப்பு குழுக்களும், 1 காணொளி பார்வை குழுவும் அமைக்கப்பட்டுள்ளது.

மேலும், கூடுதலாக 5 கண்காணிப்பு குழுக்களும் அமைக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், பறக்கும் படையினர் மதுராந்தகம் தொகுதியில் உள்ள பல்வேறு இடங்களில் தீவிர வாகன சோதனை மேற்கொண்டு வருகின்றனர்.

# வங்கி ஊழியர்கள் வேலைநிறுத்தம் காரணமாக மத்திய, மாநில அரசு ஊழியர்களுக்கு இன்றே ஊதியம் வழங்க ஏற்பாடு

வங்கி ஊழியர்கள் வேலைநிறுத்தம் காரணமாக மத்திய, மாநில அரசு ஊழியர்களுக்கு இன்றே ஊதியம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வாரத்தில் 5 நாட்கள் வேலை என்பது உட்பட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி செப்டம்பர் 28 முதல் வங்கி ஊழியர்கள் 3 நாட்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட உள்ளனர். இதனால் மாதத்தின் கடைசி நாளான செப்டம்பர் 30ம் தேதி மத்திய அரசு ஊழியர்களுக்கு ஊதியத்தை வரவு வைக்க முடியாத சூழல் எழுந்திருக்கிறது. எனவே, இந்த மாதம் முன்கூட்டியே ஊதியம் வழங்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

இதுகுறித்து மத்திய நிதித் துறையின் தலைமைக் கணக்கு அதிகாரி அலுவலகம் (சிஜிஏ) நேற்று வெளியிட்ட சுற்றறிக்கையில், ''செப்டம்பர் 28, 29, 30 ஆகிய தேதிகளில் வங்கி ஊழியர்கள் நாடு தழுவிய வேலை நிறுத்தத்தை அறிவித்து உள்ளனர். இதனால் வங்கிச் சேவைகள் பாதிக்கப்படக் கூடும்.

இதைக் கருத்தில் கொண்டு மத்திய அரசு ஊழியர்கள், ஓய்வூதியதாரர்களுக்கு முன்கூட்டியே செப்டம்பர் 25ம் தேதி ஊதியம் வழங்கப்படும்'' என்று தெரிவிக்கப்பட்டு உள்ளது.

ஞாயிற்றுக் கிழமை: செப்டம்பர் 26ம் தேதி சனிக்கிழமை, செப்டம்பர் 27ம் தேதி ஞாயிற்றுக்கிழமை நாட்களில் அரசு, தனியார் துறை வங்கிகளுக்கு விடுமுறை ஆகும். இதைத் தொடர்ந்து செப்டம்பர் 28ம் தேதி முதல் 3 நாட்கள் வங்கி ஊழியர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட இருப்பதால் தொடர்ச்சியாக 5 நாட்கள் வங்கிச் சேவைகள் பாதிக்கப்படும்.

இதைக் கருத்தில் கொண்டு செப்டம்பர் 27ம் தேதி ஞாயிற்றுக்கிழமை அரசு பொதுத்துறை வங்கிகள் செயல்படும் என்று மத்திய நிதித்துறை அறிவித்து உள்ளது. இந்நிலையில், வங்கி நிர்வாகங்கள் சார்பில் வாடிக்கையாளர்களுக்குக் குறுந்தகவல் அனுப்பப்பட்டு வருகிறது. அதில், "வங்கி ஊழியர் வேலைநிறுத்த நாட்களில் பணப் பரிவர்த்தனைகளுக்கு மொபைல் பேங்கிங், நெட் பேங்கிங், யுபிஐ உள்ளிட்ட டிஜிட்டல் தளங்கள் மற்றும் ஏடிஎம் இயந்திரத்தைப் பயன்படுத்தலாம்" என்று அறிவுறுத்தப்பட்டு உள்ளது.

தமிழக அரசு உத்தரவு: மத்திய அரசு போலவே தமிழக அரசு ஊழியர்களுக்கும் செப்டம்பர் மாதத்துக்கான ஊதியத்தை முன்கூட்டியே இன்று செப்டம்பர் 25ம் தேதி வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது.

தமிழகத்தில் மாநில அரசு ஊழியர்களுக்கு ஊதியம் மற்றும் ஓய்வூதியம் மாதத்தின் கடைசி நாளில் வழங்கப்படுகிறது. ஒரு வேளை கடைசி நாள் விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்தைய நாளிலேயே ஊதியம் வழங்கப்பட்டு விடும். தற்போது வங்கி ஊழியர் வேலை நிறுத்தப் போராட்டம் காரணமாக, வழக்கம் போல் மாத கடைசி நாளில் (செப்டம்பர் 30ம் தேதி) ஊதியம், ஓய்வூதியம் கிடைக்குமா என்று அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள், ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள் கவலை அடைந்தனர்.

இந்நிலையில், மத்திய அரசைப் போன்று தமிழக அரசு ஊழியர்களுக்கும் செப்டம்பர் மாத சம்பளத்தை முன்கூட்டியே செப்டம்பர் 25ம் தேதி வழங்க தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

இது தொடர்பாக, அனைத்து துறைகளின் செயலர்கள் மற்றும் துறைகளின் தலைவர்களுக்கு நிதித்துறை செயலர் எம்.ஏ.சித்திக் நேற்று அனுப்பிய கடிதத்தில் கூறியிருப்பதாவது: செப்டம்பர் 28 முதல் 30ம் தேதி வரை வங்கி ஊழியர்கள் நடத்தும் வேலை நிறுத்தப் போராட்டம் மற்றும் அக்டோபர் 2 முதல் 4ம் தேதி வரையிலான வார விடுமுறை நாட்கள் காரணமாக வங்கிகளின் அன்றாட செயல்பாடுகள் பாதிக்கப்படும்.

இதைக் கருத்தில் கொண்டு அனைத்துத் துறை தலைவர்களும் செப்டம்பர் மாதத்துக்கான ஊதியப் பட்டியலைத் தயாரித்து ஊதியத்தைச் செப்டம்பர் 25ம் தேதி வழங்க நடவடிக்கை எடுக்குமாறு தங்கள் அதிகாரத்துக்கு உட்பட்ட ஊதியம் வழங்கும் அலுவலர்களை அறிவுறுத்த வேண்டும். அதற்கேற்ப கருவூல கணக்கு இயக்குநர் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

இது தொடர்பாக அனைத்து ஊதியக் கணக்கு அலுவலர்களுக்கு, கருவூல கணக்கு இயக்குநர் டி.சாரு□ அனுப்பியுள்ள சுற்றறிக்கையில், ''வங்கி வேலை நிறுத்தத்தால் இம்மாதத்துக்கான அனைத்து மாதாந்திர ஊதியம், தினக்கூலி, ஓய்வூதியப் பட்டியல்களை வரும் 30ம் தேதி என்றில்லாமல் முன்கூட்டியே 25ம் தேதி அன்றே தயாரித்து அனைத்து ஊதியம், தினக்கூலி, ஓய்வூதிய பட்டியல்களுக்கான மின்னணு தீர்வு வழங்கப்பட வேண்டும். மேலும், இதுதொடர்பாக அனைத்து பணம் வழங்கும் அலுவலர்களுக்கும் பட்டியல்களை முன்கூட்டியே சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்த வேண்டும்'' என்று கூறியுள்ளார்.




# செங்குன்றம் மஸ்ஜிதே ஆயிஷா சார்பில் புதிய கட்டிடம் கட்டுவதற்கான அடிக்கல் நாட்டு விழா

செங்குன்றம், செப்டம்பர் 25:

செங்குன்றம் மஸ்ஜிதே ஆயிஷா சார்பில் புதிய கட்டிடம் கட்டுவதற்கான அடிக்கல் நாட்டு விழா தலைமை இமாம் மௌலவி முனைவர் ஏ.காஜா முயீனுத்தீன் ஜமாலி தலைமையில் செங்குன்றம் கூட்ரோடு அருகில் நடைபெற்றது.

மஸ்ஜிதே ஆயிஷா துணைத்தலைவர் ஹாபிழ் டி.அக்பர் பாஷா கிராஅத் ஓத, மஸ்ஜிதே ஆயிஷா தலைவர் டி.காஜா மொய்தீன், செயலாளர் எம்.அப்துல் லத்தீப், பொருளாளர் எஸ்.எல். முஹம்மது ஆஷிக் அலி, கமிட்டி உறுப்பினர் எம். சாகுல் அமீத் ஆகியோர் அனைவரையும் வரவேற்றனர்.





தமிழ்நாடு வக்ஃப் வாரியத் தலைவரும் இராமநாதபுரம் நாடாளுமன்ற உறுப்பினருமான கே.நவாஸ்கனி, தேனி முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜெ.எம். ஹாரூண் ரஷீத், காங்கிரஸ் கட்சி திருவள்ளூர் தெற்கு மாவட்டத் தலைவர் காங்கைகுமார், வழக்கறிஞர் எஸ்.ஏ. ஷேக் முஹம்மது அலி ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்காக கலந்து கொண்டு உரையாற்றி, அடிக்கல் நாட்டினர்.

நிர்வாகக் குழு உறுப்பினர்கள் ஐ.சேட்டு, ஏ.ஷாநவாஸ், ஏ.கலீல் ரஹ்மான், மேலாளர் கனி, ஆகியோர் நிகழ்ச்சியை மிகச் சிறப்பாக ஒருங்கிணைத்திருந்தனர்.

மஸ்ஜிதே ஆயிஷா துணை இமாம் மௌலவி எஸ்.அபுல் ஹசன்பிலாலிதொகுத்து வழங்கினார். கமிட்டி உறுப்பினர் என்.அப்துல் வாஹித் நன்றி நவின்றார்.

இந்நிகழ்வில் முன்னாள்செயலாளர்சையத் அஹ்மத், சாதிக் ஹார்டுவேர்ஸ் இப்ராகிம், சமியுல்லா, மக்பூல் பாஷா, முகம்மது யாசின் மதார், பயாஸ் உசேன், மொய்தீன் பாஷா, சேட்பா, ஏஆர்எஸ். யூசுப், ஆசை ஜபருல்லாஹ், ஐ.ரபீக், ஏ.கே. உமர், கலீல், முஹம்மது இப்ராகிம், நசீர்,எஸ்.ரியாஸ்பாஷா, ச.சாகுல் ஹமீது, பி.முஹம்மது, மக்பூ, ஜாகீர், காந்தி நகர் பள்ளிவாசல் தலைவர் இஸ்மாயில், சோலியா மஸ்ஜித் காஜா மொய்தீன், பாடியநல்லூர் பள்ளிவாசல் அபுபக்கர், காங்கிரஸ்கட்சிமாநிலபொதுச் செயலாளர் ஆர்.ஆர். சாந்தகுமார், ரஜினி, தவெக செங்குன்றம் நகரச் செயலாளர் கே.விஜி, செங்குன்றம் (தெற்கு) அனைத்துவியாபாரிகள் முன்னேற்ற நலச் சங்கத் தலைவர் லட்சுமி நாராயணன், பொருளாளர் யுவராஜ், பாலமுருகன் மற்றும் மஸ்ஜிதே ஆயிஷா நிர்வாகிகள் உறுப்பினர்கள், ஜமாஅத்தார்கள், செங்குன்றம் சுற்றுவட்டார பள்ளிவாசல் ஜமாஅத்தார்கள், வணிகப் பெருமக்கள், பொதுமக்கள் திரளாக கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

### சோளிங்கர் அருகே உடையார்பாளையத்தில் அமைய உள்ள

# 11 கோடி கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் திட்டத்தை கைவிட கோரி பொதுமக்கள் எதிர்ப்பு

## 300க்கும் மேற்பட்டோர் உண்ணாவிரதம் போராட்டம்

சோளிங்கர் அருகே உடையார்பாளையத்தில் அமைய உள்ள 11 கோடி கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் திட்டத்தை கைவிட கோரி பொதுமக்கள் எதிர்ப்பு 300க்கும் மேற்பட்டோர் உண்ணாவிரதம் போராட்டத்தில் அமைக்க எதிர்ப்பு தெரிவித்து, சோளிங்கர்–அரக்கோணம் நெடுஞ்சாலை அருகே பொதுமக்கள் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பாண்டியநல்லூர் ஊராட்சி மன்றத் தலைவர் கல்யாணி ரகுராம் ராஜன் செயலாளர் பூர்ணசந்திர் ஆகியோர் கலந்து கொண்டு பேசினர்.

அப்போது சுத்திகரிப்பு நிலையம் அமைந்தால் நிலத்தடி நீர், குடிநீர் மற்றும் விவசாய நிலங்கள் பாதிக்கப்பட வாய்ப்புள்ளதாக பொதுமக்கள் தெரி



ஈடுபட்டனர். இத்திட்டத்தை வேறு இடத்திற்கு மாற்றும் தொடர் போராட்டம் நடைபெறும் என தெரிவித்தனர்.

ராணிப்பேட்டை மாவட்டம், சோளிங்கர் அடுத்த பாண்டியநல்லூர் ஊராட்சிக்கு உட்பட்ட உடையார்பாளையம் கிராமத்தில் சோளிங்கர் நகராட்சி சார்பில் 11 கோடி ரூபாய் மதிப்பில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் தலைமையில் நடைபெற்ற போராட்டத்தில் உடையார்பாளையம், நரசிம்மர்புறம், போடபாறை, பாண்டியநல்லூர் உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த 300க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

உண்ணாவிரதம் போராட்டத்தில் வழக்கறிஞர்கள் உதயகுமார், ரகுராம் ராஜ் மற்றும் திமுக மத்திய ஒன்றிய வித்தனர்.

எனவே, அதிகாரிகள் சுற்றுச்சூழல் மற்றும் பொதுமக்களின் பாதுகாப்பு குறித்து உரிய ஆய்வு மேற்கொண்டு திட்டத்தை வேறு இடத்திற்கு மாற்ற வேண்டும் என்றும் வலியுறுத்தினர்.

சுத்தகரிப்பு நிலையம் திட்டத்தை கைவிடும் வரை தொடர் போராட்டம் நடத்தப்படும் என தெரிவித்தனர்.

### "11 மாத ஒப்பந்த வேலை வேண்டாம்; செவிலியர்களுக்கு நிரந்தரப் பணி வேண்டும்!"

# 4,724 செவிலியர்களை தொகுப்பூதியத்தில் நியமிப்பதற்கு கடும் எதிர்ப்பு

## 30ம் தேதி சென்னையில் உண்ணாவிரதம்: தமிழ்நாடு செவிலியர்கள் மேம்பாட்டு சங்கம் அதிரடி அறிவிப்பு

திருவண்ணாமலை: செப்,.25

தமிழ்நாடு முழுவதும் காலியாக உள்ள செவிலியர் பணியிடங்களை நிரப்பும் நடவடிக்கையில், 4,724 செவிலியர்களை 11 மாத தொகுப்பூதிய அடிப்படையில் பணியமர்த்தும் முடிவுக்கு தமிழ்நாடு செவிலியர்கள் மேம்பாட்டு சங்கம் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளது. செவிலியர்களை நிரந்தரப் பணியிடங்களில் நியமிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி தொடர் போராட்டங்களை நடத்தப்போவதாக சங்கம் அறி




வித்துள்ளது.

இதுகுறித்து சங்கத்தின் பொருளாளர் தரணி கூறியதாவது:

"4,724 காலிப் பணியிடங்களில் செவிலியர்கள் நியமிக்கப்படுவார்கள் என்ற அறிவிப்பை செவிலியர்கள் மகிழ்ச்சியுடன் வரவேற்றோம். ஆனால், அந்தப் பணியிடங்கள் 11 மாத தொகுப்பூதிய அடிப்படையில் நிரப்பப்படும் என்ற தகவல் மிகுந்த வேதனையை ஏற்படுத்தியுள்ளது.

MRB மூலம் செவிலியர்கள் தேர்வு செய்யப்பட்டு நிரந்தரப் பணியிடங்களில் நியமிக்கப்படும்போது, தகுதி மற்றும் சுழற்சி முறையின் அடிப்படையில் பல்வேறு தரப்பினருக்கும் வாய்ப்பு கிடைக்கிறது. இதன் மூலம் தரமான செவிலியர்களை தேர்வு செய்ய முடியும். ஆனால், DHS மூலம் 11 மாத ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கும் முறையால் செவிலியர்களின் பணி பாதுகாப்பு கேள்விக்குறியாகும்.

2015 மற்றும் 2019ம் ஆண்டுகளில் MRB மூலம் தேர்வு செய்யப்பட்ட பல செவிலியர்கள் இன்னும் நிரந்தரமாகாமல், 10 ஆண்டுகளுக்கும் மேலாக தொகுப்பூதிய அடிப்படையில் பணியாற்றி வருகின்றனர். 11 மாத பணி, ஒரு மாத இடைவெளி, மீண்டும் 11 மாத பணி என்ற நடைமுறை செவிலியர்களின் எதிர்காலத்தை பாதிக்கும்.

தொகுப்பூதிய முறையை முற்றிலுமாக அகற்றி, செவிலியர்களுக்கு நிரந்தரப் பணியிடங்களை உருவாக்க வேண்டும் என்பதே எங்களது முக்கிய கோரிக்கை. 2,500 தொகுப்பூதிய செவிலியர்கள் நிரந்தரப்படுத்தப்படுவார்கள் என்ற அறிவிப்பை வரவேற்கிறோம். அதே நேரத்தில், 7 ஆண்டுகளுக்கும் மேலாக தொகுப்பூதியத்தில் பணியாற்றி வரும் சுமார் 6,000 செவிலியர்களையும் படிப்படியாக நிரந்தரப்படுத்த வேண்டும்.

மேலும், 6 மாவட்டங்களில் செவிலியர் கல்லூரிகள் தொடங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், அங்கு Nursing Tutor பணியிடங்களையும் ஒப்பந்த அடிப்படையில் நிரப்பும் நடவடிக்கைக்கு எதிர்ப்புதெரிவிக்கிறோம். தகுதியும் அனுபவமும் கொண்ட மூத்த செவிலியர்களுக்குநிரந்தரவாய்ப்பு வழங்க வேண்டும்.

சுகாதாரத் துறையில் ஒப்பந்த முறையை அதிகரிப்பதும், தனியார்–பொது கூட்டாண்மை நடவடிக்கைகளை கொண்டு வருவதும் பொதுச் சுகாதார சேவையை பாதிக்கும் அபாயம்உள்ளது. எனவே, செவிலியர் பணியிடங்களை நிரந்தரமாக உருவாக்கி, MRB மூலம் வெளிப்படையான முறையில் தேர்வு நடத்தி பணியமர்த்த வேண்டும். இதனை வலியுறுத்தி கடந்த18ம்தேதிஅனைத்து மாவட்ட சுகாதார அலுவலகங்கள் மற்றும் மருத்துவக் கல்லூரிகள் முன்பு போராட்டம் நடத்தினோம். வரும் 28 மற்றும் 29ம் தேதிகளில் செவிலியர் மாணவர்களிடையே விழிப்புணர்வு பிரசாரம் மேற்கொள்ளப்படும். 30 ம் தேதி சென்னையில் உண்ணாவிரதப் போராட்டம் நடைபெறும். அரசு கோரிக்கைக்கு செவிசாய்க்கவில்லை என்றால், மிகப் பெரிய தொடர் போராட்டத்தை முன்னெடுப்போம்" என்றார்.

இந்த செய்தியாளர் சந்திப்பில் சங்கத்தின் மாவட்ட தலைவர் சீதா, மாவட்ட துணை தலைவர் விஜயா, மாவட்ட செயலாளர் நந்தினி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



ராணிப்பேட்டை மாவட்ட ஆட்சியர் திருமதி.ந.ப்ரியா ரவிச்சந்திரன். இ.ஆ.ப.. அவர்கள் மாவட்டஆட்சியர்அலுவலகத்தில்அரசுவனத்துறைப் பள்ளியில் ஆசிரியாராகப் பணிபுரிந்த திரு.க.சந்துரு என்பவர் பணியிடையே காலமானதையடுத்து, அன்னாரின்வாரிசுதாரரானமனைவிதிருமதி.ப.மாலின் என்பவர்க்கு கருணை அடிப்படையில் வருவாய்த் துறையில் பதிவறை எழுத்தர் பணியிடத்தில் பணிபுரிவதற்கான பணி நியமன ஆணையினை வழங்கினார்.

# ஆதரவற்ற மூதாட்டியை மீட்டு மருத்துவமனையில் சேர்த்த மருந்தாளுநரின் சமூக சேவை

தேனி, செப்.25,

தேனி மாவட்டம் ஆண்டிபட்டி தாலுகா எம்.சுப்புலாபுரத்தை சேர்ந்தவரும், RBSK திட்டத்தின் அரசு ஆரம்ப சுகாதார நிலைய மருந்தாளுநராக (Pharmacist) பணிபுரிந்து வருபவருமான ரஞ்சித்குமார் மனிதநேயத்துடன் செய்து வரும் சமூக சேவை அப்பகுதி மக்களிடையே



பெரும் நெகிழ்ச்சியையும் பாராட்டையும் பெற்றுள்ளது.

மதுரை மாவட்டம் எழுமலை உசிலம்பட்டி சாலையில், எழுமலை காவல் நிலையம் அருகே சாலை ஓரத்தில் சுமார் 60 வயது மதிக்கத்தக்க மூதாட்டி ஒருவர் ஆதரவற்ற நிலையில் தவித்து வந்தார். கணவனை இழந்த அந்த மூதாட்டி, மனநலம் பாதிக்கப்பட்டு, அழுக்கு துணிகளுடனும் துர்நாற்றம் வீசிய நிலையிலும் வீதியிலேயே உறங்கி வந்துள்ளார்.

இதனை கண்ட மருந்தாளுநர் ரஞ்சித்குமார், உடனடியாக எழுமலை காவல்துறையினரிடம் முறைப்படி அனுமதி மற்றும் மனு ரசீது பெற்று (CSR No:0151/2026), அந்த மூதாட்டியை மீட்க நடவடிக்கை எடுத்தார். தொடர்ந்து, தேனி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையின் கீழ் இயங்கி வரும் NRT அரசு மனநல மருத்துவமனையில் உள்ள ECRC மனநல வார்டில் அந்த மூதாட்டியை பாதுகாப்பாக சேர்த்து, அவருக்கு தேவையான பராமரிப்பு மற்றும் சிகிச்சைகள் கிடைக்க வழிவகை செய்துள்ளார்.

அரசு பணியில் இருந்துகொண்டே, ஆதரவற்ற மற்றும் மனநலம் பாதிக்கப்பட்டவர்களை கண்டறிந்து, காவல்துறை அனுமதியுடன் அவர்களை உரிய காப்பகங்களிலும் மருத்துவமனைகளிலும் சேர்த்து வரும் மருந்தாளுநர் ரஞ்சித்குமாரின் இந்த தலைசிறந்த சமூக சேவையை அப்பகுதி பொதுமக்களும் சமூக ஆர்வலர்களும் வெகுவாக பாராட்டி வருகின்றனர்.

# மதுராந்தகம் பசுவங்கரணை, கீழாமூர் ஊராட்சி பொதுமக்களிடம் செங்குன்றம் பேரூர் திமுக சார்பில் தீவிர வாக்கு சேகரிப்பு

செங்குன்றம், செப்டம்பர் 25:

சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் ஆலோசனைபடி மதுராந்தகம் இடைத்தேர்தல் திமுக வேட்பாளர் இ.பரந்தாமனுக்கு உதயசூரியன் சின்னத்தில் மாதவரம் தெற்கு பகுதி செயலாளர்ஜி.துக்காராம், செங்குன்றம் பேரூர்கழக பொறுப்பாளர் வழக்கறிஞர் ஆர்.டி. சுதாகர் ஆகியோர் தலைமையில் அச்சரப்பாக்கம் வடக்கு ஒன்றியம் பசுவங்கரணை ஊராட்சியில் காலையில் தீவிர பிரச்சாரமும், கீழாமூர் ஊராட்சியில் மதியம் 100 நாள் வேலையில் பணிபுரியும் பெண்களுடன் கலந்துரையாடலும், கீழாமூர் பாகம் எண் :150இல் மாலையில் கீழாமூர் ஊராட்சி திமுக நிர்வாகிகளுடன் ஒன்றிய கழக பிரதிநிதி பி.அன்பு, 10வது வார்டு செயலாளர் வி.மதிவாணன், கழக செயல்வீரர்கள் காட்டூர் எஸ்.கே. சேகர், எம் எஸ்கே. யுவராஜ் உள்ளிட்ட நிர்வாகிகள் திராவிட மாடல் சாதனையை எடுத்துச் சொல்லி வீடு வீடாகச் சென்று தீவிர வாக்கு சேகரித்தனர்.





# "சின்னமனூரில் தலைதூக்கும் பேனர் கலாச்சாரம்" நடவடிக்கை எடுக்க பொதுமக்கள் கோரிக்கை

சின்னமனூர், செப்.25,

தேனி மாவட்டம் சின்னமனூர் நகர் பகுதியில் சமீபகாலமாக நாளுக்கு நாள் அதிகரித்து வரும் பேனர் மற்றும் பிளக்ஸ் கலாச்சாரம், பொதுமக்கள் மற்றும் வாகன ஓட்டிகளுக்கு கடும் அச்சுறுத்தலை ஏற்படுத்தி வருகிறது.

இதில் முதன்மையாக, சிறிய அளவிலான அரசியல் நிகழ்வுகள் என்றாலும் கூட, வார்டு செயலாளர்கள் முதல் நகர நிர்வாகிகள்வரைபோட்டி போட்டுக்கொண்டு ஆங்காங்கே 10 முதல் 15க்கும் மேற்பட்ட பிளக்ஸ் போர்டுகளை அமைப்பது தொடர்கதையாகிவிட்டது.






இதன் தொடர்ச்சியாக, சுபநிகழ்ச்சிகளிலும் இந்த பேனர் கலாச்சாரம் பெருமளவில் ஊடுருவியுள்ளது. ஆரம்ப காலத்தில் திருமணங்கள் மற்றும் குடும்ப விசேஷங்களில், வருகை தரும் உறவினர்களுக்கு நல்வரவு கூறும் எளிய அடையாளமாக மட்டுமே இத்தகைய பிளக்ஸ்கள் பயன்படுத்தப்பட்டு வந்தன. ஆனால் தற்போது இது கௌரவம் மற்றும் போட்டியின் அடையாளமாக மாறியுள்ளது. குடும்ப உறுப்பினர்கள், நண்பர்கள் வட்டம், உறவினர்கள் என பல தரப்பினரும் போட்டி போட்டுக்கொண்டு வைக்கும் இந்த பேனர்கள், நிகழ்ச்சி முடிவடைந்த பிறகும் அகற்றப்படாமல் வாரக்கணக்கில் அப்படியே விடப்படுகின்றன.

மேலும், வர்த்தக மற்றும் தொழில் ரீதியாக வைக்கப்படும் விளம்பர பேனர்களின் எண்ணிக்கையும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. வியாபார நோக்கத்திற்காக வைக்கப்படும் இத்தகைய பேனர்களுக்கு காவல்துறை மற்றும் நகராட்சி நிர்வாகம் குறிப்பிட்ட கால அவகாசத்தை மட்டுமே நிபந்தனையாக விதிக்க வேண்டும். தொழில்தொடங்கும் போது வைக்கப்படும் விளம்பர பலகைகளை, அந்த குறிப்பிட்ட காலக்கெடு முடிந்தவுடன் உடனடியாக சம்பந்தப்பட்டவர்களே அகற்றிவிட வேண்டும் என்ற எச்சரிக்கையுடன் கூடிய கட்டுப்பாடுகள் விதிக்கப்பட வேண்டும்.

குறிப்பாக, சின்னமன்னூர் காந்தி சிலை அருகே உள்ள பஸ் நிறுத்தம் மற்றும் அதற்கு பின்னால் அமைந்துள்ள அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி பகுதிகளில் அமைக்கப்படும் பிரம்மாண்டமான பிளக்ஸ் போர்டுகளால் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. சாலையின் இருபுறமும் வாகனங்கள் வருவதும் போவதும் சரிவர தெரியாததால், விபத்துகள் ஏற்படும் அபாயம் நிலவுகிறது. தற்போதைய காற்று காலத்தில், முறையான பாதுகாப்பு விதிகளின்றி வைக்கப்படும் இந்த பிளக்ஸ்கள் மின்சார கம்பிகள் மற்றும் வயர்களில் உரசி பெரிய அளவிலான மின் அசம்பாவிதங்களுக்கும் வழிவகுக்கும் சூழல் உள்ளது.

எனவே, நகராட்சி நிர்வாகமும் காவல்துறையும் பேனர்களுக்கு அனுமதி அளிக்கும் போது, குறிப்பிட்ட வரையறைகளுடனும் கடும் நிபந்தனைகளுடனும் மட்டுமே அனுமதி வழங்க வேண்டும். நிகழ்ச்சி அல்லது குறிப்பிட்ட கால அவகாசம் முடிந்த மறுநாளே அந்த பேனர்களை கட்டாயம் அகற்றிவிட வேண்டும். பொதுமக்களின் பாதுகாப்பையும் போக்குவரத்து நெரிசலையும் கருத்தில் கொண்டு, விதிமுறைகளை மீறி அமைக்கப்படும் பிளக்ஸ் போர்டுகளை யாருடைய தயவு தாட்சண்யமும் இன்றி நகராட்சி நிர்வாகமும் காவல்துறையும் இணைந்து உடனடியாக அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என சின்னமன்னூர் பகுதி சமூக ஆர்வலர்களும் பொதுமக்களும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# "ஸ்ரீவில்லிபுத்தூரில் மகளிருக்கான இலவச தையல் பயிற்சி தொடக்கம்"

## பயனாளிகளுக்கு சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு

ஸ்ரீவில்லிபுத்தூர், செப். 25,

ஸ்ரீவில்லிபுத்தூர் வாப்ஸ் (VAPS) அலுவலகத்தில் மகளிருக்கான ஒரு மாத கால அடிப்படை தையல் பயிற்சி துவக்க விழா மற்றும் சான்றிதழ் வழங்கும் விழா வியாழக்கிழமை நடைபெற்றது. IIFL சமஸ்தா நிறுவனத்தின் கார்ப்பரேட் சமூகப் பொறுப்பு (CSR) திட்டத்தின்கீழ், மதுரை வாப்ஸ் நிறுவனம் இணைந்து இந்த இலவச தொழிற்பயிற்சியை நடத்துகிறது.




நிகழ்ச்சிக்கு வருகை தந்த அனைவரையும் மதுரை வாப்ஸ் நிறுவனத்தின் திட்ட அதிகாரி Dr. M. சுப்புராஜன் வரவேற்று பேசினார்.

அப்போது அவர், மகளிருக்கு தொழிற்திறன் பயிற்சியின் அவசியம் குறித்து விளக்கியதுடன், இப்பயிற்சியை சரியாக பயன்படுத்தி ஒவ்வொருவரும் வெற்றிகரமான தொழில் முனைவோராக உயர வேண்டும் என ஊக்கமளித்தார்.

அதனை தொடர்ந்து, சிறப்பு விருந்தினர்கள் குத்துவிளக்கேற்றி விழாவை தொடங்கி வைத்தனர். நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினர்களாக பங்கேற்ற ஸ்ரீவில்லிபுத்தூர் அனைத்து மகளிர் காவல் நிலைய தலைமைக் காவலர்கள் திருமதி. சுதந்திர கனி மற்றும் திருமதி. மாணிக்க செல்வி ஆகியோர் பேசுகையில், பெண்களின் பாதுகாப்பு முறைகள் மற்றும் முழு ஈடுபாட்டுடன், பாதுகாப்பான முறையில் தொழிலை எவ்வாறு நடத்துவது என்பது குறித்து விழிப்புணர்வு உரையாற்றினர்.

மேலும், ஸ்ரீவில்லிபுத்தூர் சமூக நலத்துறையின் ஊரக நல அலுவலர்கள் திருமதி. பூங்கொடி மற்றும் திருமதி. கோவிந்தம்மாள் ஆகியோர் பங்கேற்று, பெண்களின் வாழ்வாதார முன்னேற்றத்தில் அரசின் திட்டங்கள் மற்றும் பங்களிப்புகள் குறித்து விரிவாக எடுத்துரைத்தனர்.

பெண்கள் சமூக அக்கறையோடு தொழிலை மேற்கொண்டு பொருளாதார ரீதியாக உயர்வடைய வாழ்த்தினர்.

இதனை தொடர்ந்து, ஏற்கனவே சிறுதானிய மதிப்பு கூட்டல் பயிற்சி முடித்த பயனாளிகளுக்கு பயிற்சி சான்றிதழ்கள், MSME சான்றிதழ்கள் மற்றும் சமூக பாதுகாப்பு திட்ட அட்டைகள் வழங்கப்பட்டன.

இவ்விழாவில் 60க்கும் மேற்பட்ட பெண்கள் ஆர்வத்துடன் கலந்துகொண்டனர். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை கள அலுவலர் திருமதி. N. கொடிமலர் சிறப்பாக செய்திருந்தார்.

நிறைவாக, திட்ட ஒருங்கிணைப்பாளர் திரு. P. ஆனந்தராஜ் நன்றி கூறினார்.

# காலிப்பணியிடங்களை உடனடியாக நிரப்ப வேண்டும்; அங்கன்வாடி ஊழியர்கள் அதிரடி ஆர்ப்பாட்டம்

## பல்வேறு கோரிக்கைகள் வலியுறுத்தல்



திருவண்ணாமலை, செப்.25

செய்யாறில் குழந்தை வளர்ச்சி அலுவலகம் முன்பு தமிழ்நாடு அங்கன்வாடி ஊழியர் மற்றும் உதவியாளர் சங்கம் சார்பில் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

அங்கன்வாடி மையங்களில் உள்ள காலிப்பணியிடங்களை உடனடியாக நிரப்ப வேண்டும், அங்கன்வாடி ஊழியர்கள் மற்றும் உதவியாளர்கள் அனைவரையும் பணி நிரந்தரம் செய்து கால முறை ஊதியம் வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் ஆர்ப்பாட்டத்தில் வலியுறுத்தப்பட்டன.

ஆர்ப்பாட்டத்திற்கு கெஜவள்ளி தலைமை தாங்கினார். காயத்ரி வரவேற்புரை வழங்கினார். கலைவாணி வாழ்த்துரை வழங்கினார்.

கெஜலட்சுமி, சங்கீதா, சித்ரா ஆகியோர் சிறப்புரை யாற்றினர். சிஐடியு சங்கர் நன்றி உரையாற்றினார்.

ஆர்ப்பாட்டத்தில், அங்கன்வாடி ஊழியர்களுக்கு அடிப்படை ஊதியம் ரூ.18 ஆயிரம் வழங்கப்படும் என்ற தேர்தல் வாக்குறுதியை உடனடியாக அமல்படுத்த வேண்டும். அகவிலைப் படியுடன் கூடிய ஓய்வூதியம் வழங்க வேண்டும். பணிக்கொடையாக ரூ.10 லட்சம் வழங்க வேண்டும் என்ற நீதிமன்றத் தீர்ப்பை உடனடியாக அமல்படுத்த வேண்டும் என வலியுறுத்தப்பட்டது.

மேலும், ஏழை குழந்தைகளின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு அங்கன்வாடி மையங்களில் காலியாக உள்ள பணியிடங்களை உடனடியாக நிரப்ப வேண்டும். அங்கன்வாடி மையங்களுக்கு வரும் குழந்தைகளுக்கான உணவு செலவினத் தொகையை முன்பணமாகவோ அல்லது மாதந்தோறும் வழங்க வேண்டும். போஷான் டிராக்கர் பணிக்கான அனைத்து செலவினத் தொகையையும் உடனடியாக வழங்க வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டது.

தகுதிவாய்ந்த குறுமை ஊழியர்கள் மற்றும் தகுதியுள்ள உதவியாளர்களுக்கு எவ்விததாமதமும் இன்றி பதவி உயர்வு வழங்க வேண்டும். உள்ளூர் மற்றும் வெளியூர் பணிமாறுதல்களை உடனடியாக வழங்க வேண்டும். ஆண் வாரிசுகளுக்கும் வாரிசு அடிப்படையிலான பணி வழங்க வேண்டும் எனவும் வலியுறுத்தினர்.

10 ஆண்டுகள் பணி முடித்த அங்கன்வாடி ஊழியர்களுக்கு பதவி உயர்வு வழங்க வேண்டும். அவ்வாறு பதவி உயர்வு வழங்கப்படாத நிலையில், மேற்பார்வையாளர்கள் நிலை2 ஊதியத்தை வழங்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டது.

அங்கன்வாடி மையங்களுக்கு சனிக்கிழமையும் விடுமுறை வழங்க வேண்டும். FRS முறையை எளிமைப்படுத்த வேண்டும். அங்கன்வாடி ஊழியர்களுக்கும் பாகுபாடின்றி 12 மாத மகப்பேறு விடுப்பு வழங்க வேண்டும். அங்கன்வாடி ஊழியர்கள் மற்றும் உதவியாளர்களுக்கு மருத்துவ வசதிக்கான ESI முறையை அரசு அறிவிக்க வேண்டும் எனவும் ஆர்ப்பாட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

மேலும், உணவு செலவினத் தொகையை ரூ.5 ஆகவும், சில்லறை செலவினத் தொகையை ரூ.500 ஆகவும், போஷான் டிராக்கர் பணிக்கான தொகையை ரூ.1,000 ஆகவும், கூட்டுப் பயணப்படி தொகையை ரூ.300 ஆகவும் உயர்த்தி வழங்க வேண்டும். பதவி உயர்வு பெறும் ஊழியர்களின் பணி காலத்தைக் கணக்கில் கொண்டு குறைந்த பட்ச ஓய்வூதியம் வழங்க வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி அங்கன்வாடி ஊழியர்கள் மற்றும் உதவியாளர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

## பொத்தூர் ஊராட்சி பவானிநகர் குடியிருப்போர் பொது நலச் சங்கம் சார்பில்

# எம்.எல். விஜய் பிரபு MLAவிடம் புதிய சாலைகள், மின்கம்பங்கள் உள்ளிட்ட கோரிக்கை மனு

செங்குன்றம், செப்டம்பர் 25:

மாதவரம் தொகுதி பொத்தூர் ஊராட்சி அண்ணாமலைநகரில் புதிய டிரான்ஸ்பார்மர் துவக்க விழாவில் கலந்து கொண்ட மாதவரம் சட்டமன்ற உறுப்பினரும் தவெக திருவள்ளூர் தென்மேற்கு மாவட்டச் செயலாளருமான எம்.எல். விஜய்பிரபு கலந்து கொண்டார்.



அப்பொழுது பொத்தூர் ஊராட்சி பவானிநகர் குடியிருப்போர் பொது நல சங்கம் மற்றும் பவானி நகர் த.வெ.க நிர்வாகிகள் வி.எஸ். மனோகரன், வால்டர் பி.கே. மாதவ ராவ், கே.பிரபாகர், எஸ். செல்வகுமார், விஜய் தியாகு, சங்க நிர்வாகி பிரான்சிஸ் உள்ளிட்டோர் மாதவரம் சட்டமன்ற உறுப்பினர் எம். எல். விஜய் பிரபுவிடம், ஜெயலட்சுமிநகர்மெயின் ரோடு 480 மீட்டர், பவானி நகர் 3வது தெரு 264 மீட்டர், 1வது தெரு 264 மீட்டர் மற்றும் ஐந்தாவது தெரு 264 மீட்டர் சாலைகள் சரியில்லாமல் இருப்பதால் மழைக்காலங்களில் பள்ளி செல்லும் மாணவ மாணவிகள், மருத்துவமனை, வேலைக்குச் செல்வோர் மிகவும் சிரமத்திற்குள்ளாகி வருகின்றனர்.

எனவே உடனடியாக இந்தச் சாலைகளை சீரமைத்து புதிய சாலை அமைத்து தருமாறும், பவானிநகருக்குட்பட்ட பல்வேறு தெருக்களில் மின்விளக்குகள் பழுதடைந்து எரியாமல் இருப்பதனால் இரவு நேரங்களில்பொதுமக்கள்மிகுந்த சிரமத்திகுள்ளாகி வருவதால் வில்லிவாக்கம் வட்டார வளர்ச்சி அலுவலர், ஊராட்சி செயலாளர்களிடம் தெரு விளக்குகளை சரி செய்து தர அறிவுறுத்துமாறும், குப்பை அள்ளும் இவி வாகனம் பற்றாக்குறையாக உள்ளதோடு அறிவிப்பு செய்யும் ஒலிபெருக்கி சரியில்லாமல் இருப்பதால் சத்தம் சரியாக இல்லாததால் அதைச் சரிசெய்து தருமாறும், ஒரு சில இடங்களில் மின்இணைப்பு கம்பி கசிந்து ஒன்றுடன் ஒன்று இணைந்து தீ பற்றி எரிவதால் அடிக்கடி மின்தடை ஏற்படுகின்றது. எனவே பவானிநகர் 2வது மெயின்ரோட்டில் 4 புதிய மின்கம்பங்கள் அமைத்து தர வேண்டுமென்றும் கோரிக்கை மனு வழங்கினர்.

இதை பரிசீலித்த மாதவரம் சட்டமன்ற உறுப்பினர் அந்தந்த துறை சார்ந்த அதிகாரிகளுக்கு இந்த மனுக்களை அனுப்பி உடனடி நடவடிக்கை எடுக்க ஆவன செய்வதாக உறுதியளித்தார்.



# செய்யாறு நகரில் கலைமகள் வித்யா மந்திர் பிரைமரி பள்ளியில் பிளாஸ்டிக் குப்பைகள் எவ்வாறு பிரிக்க செயல்முறை விளக்கம்

செய்யாறு ,செப்.25

திடக்கழிவு மேலாண்மை விதிகள்2026 இன் படியும் தூய்மையே சேவை 2026 நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக செய்யாறு நகரில் கலைமகள் வித்யா மந்திர் பிரைமரி பள்ளியின் மாணவ மாணவிகளுக்கு குப்பைகள் நான்கு வகைகளாக தரம் பிரித்து வழங்குவதும் குறித்தும் மற்றும் பிளாஸ்டிக் குப்பைகள் எவ்வாறு பிரிக்கப்படுகிறது குறித்தும் நகராட்சி அலுவலக வளாகத்தின் பின்புறம் செயல்படும் பொருட்கள் வளமீட்பு மையத்திற்கு நேரில் அழைத்து வந்து செயல்முறை விளக்கம் செய்து காண்பிக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் நகராட்சி ஆணையாளர் செ.ஆண்ரூஸ், துப்புரவு ஆய்வாளர் கே.மதனராசன் கலைமகள் வித்யா மந்திர் பள்ளியின் தாளாளர் சத்யா மற்றும் தூய்மை இந்தியா திட்ட பரப்புரையாளர்கள் கலந்து கொண்டனர்..



கன்னியாகுமரி மாவட்டத்தில் மாவட்டத் தலைவர் திரு மு, பிரதாப் இ.ஆ.ப அவர்கள் பால்குளம் பொறியியல் மற்றும் தொழில்நுட்ப கல்லூரியில் நடைபெற்ற கண்காட்சியினையும் வீட்டில் சோலார்போடு அமைப்பினையும் அதன் பயன்களையும் மாணவர்கள் விளக்கினார்கள். குடிசைத் தொழில் பொருள்களையும். கடல் சங்கினால் வடிவமைக்கப்பட்ட பொருள்களையும் பார்வையிட்டார்,

# புரட்டாசி மாத குரு பிரதோஷ விசேஷ பூஜை



இராணிப்பேட்டை மாவட்டம் ஆற்காடு தென் பாலாற்றங்கரை அருள்மிகு காமாட்சி அம்பாள் உடனுறை கைலாசநாதர் ஆலயத்தில் புரட்டாசி மாத குரு பிரதோஷ விசேஷ நாளான இன்று 24.09.26 வியாழன் கிழமை கைலாசநாதர் காமாட்சி அம்பாள் நந்திக்கு சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு காமாட்சி அம்பாள் கைலாசநாதர் உற்சவர் ஊஞ்சல் சேவையில் அருள்பாலித்தார் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு அருள் பெற்றனர் .

தேனி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.K.S.பிரவீன் கௌதம்,இ.கா.ப., அவர்களின் உத்தரவின் பேரில் சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படை சார்பில் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களைத் தடுக்கும் நோக்கில் தொடர் விழிப்புணர்வு மேற்கொள்ளப்பட்டு வருகின்றன, இந்நிகழ்வின் போது பெண்கள் மற்றும் பொதுமக்களுக்கு அவர்களின் பாதுகாப்பு, சட்ட உரிமைகள், சைபர் கிரைம் இணையவழி மோசடிகளில் இருந்து எச்சரிக்கையாக இருப்பது, பாலியல் தொல்லைகள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களை உடனடியாக காவல்துறைக்கு தெரிவிப்பதன் அவசியம் குறித்து விளக்கப்பட்டது.




மேலும், அவசர காலங்களில் உதவி பெறுவதற்கான:

1091 – சிங்கப்பெண் அதிரடிப்படை உதவி எண்
100 – காவல்துறை அவசர உதவி எண்
181 – மகளிர் உதவி எண்
1098 – குழந்தைகள் உதவி எண்
1930 சைபர் கிரைம் புகார் உதவி எண்

ஆகிய சேவை எண்கள் குறித்து பொதுமக்களுக்கு எடுத்துரைக்கப்பட்டு, பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்த அனைவரும் விழிப்புணர்வுடன் செயல்பட வேண்டுமென அறிவுறுத்தப்பட்டது.

# கொலை முயற்சி வழக்கில் குற்றவாளிக்கு 07 ஆண்டுகள் கடுங்காவல்

## சிறைத் தண்டனை மற்றும் ரூ.15,000 அபராதம்

இராணிப்பேட்டை மாவட்டம், திமிரி காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில், கடந்த 25.10.2022 அன்று கொலை முயற்சி பதிவு செய்யப்பட்ட வழக்கில் சம்பந்தப்பட்ட எதிரி யுவராஜ் (வ/34) என்பவர் கைது செய்யப்பட்டு நீதிமன்றக் காவலில் சிறையில் அடைக்கப்பட்டார்.

அமர்வு இவ்வழக்கு இராணிப்பேட்டை முதலாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் துரிதமாக விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இந்நிலையில், இன்று (24.09.2026) இராணிப்பேட்டை முதலாவது கூடுதல் மாவட்ட அமர்வு மாண்புமிகு நீதிபதி அவர்கள், இ வ்வழக்கில் குற்றம் நிரூபிக்க ப்பட்டதன் அடிப்படையில், குற்றவாளியான யுவராஜ் (வ/34) என்பவருக்கு



07 ஆண்டுகள் கடுங்காவல் சிறைத் தண்டனை மற்றும் ரூ.15,000 அபராதம் என நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. இவ்வழக்கில் நீதிமன்றத்தில் சிறப்பாக வழக்கை நடத்தி குற்றவாளிகளுக்கு தண்டனை பெற்றுத் தந்த முன்னாள் அரசு வழக்கறிஞர் திரு.சங்கர், தற்போதைய அரசு வழக்கறிஞர் திரு.பாஸ்கரன் வழக்கின் அப்போதைய புலனாய்வு அதிகாரியான காவல் ஆய்வாளர் திருமதி. மங்கையர்கரசி, தற்போதைய புலனாய்வு அதிகாரியான காவல் ஆய்வாளர் திருமதி. விஜயலஷ்மி மற்றும் நீதிமன்ற தலைமை காவலர் (HC 368) திரு. தியாகு ஆகியோரை, இராணிப்பேட்டை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு. பே.சிபின், இ.கா.ப., அவர்கள் வெகுவாகப் பாராட்டினார்.

## ஆதார் இணைப்பு இல்லையா? இனி உதவித்தொகை பெற உதவி மையங்களை அணுகலாம்:

# திருவண்ணாமலை மாவட்டத்தில் சமூக பாதுகாப்புத் திட்ட பயனாளிகளுக்கு ஆட்சியர் வந்தனா கார்க் முக்கிய அறிவிப்பு

திருவண்ணாமலை: செப்.25

திருவண்ணாமலை மாவட்டத்தில் சமூக பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் உதவித்தொகை பெறும் பயனாளிகளுக்கு, செப்டம்பர்மாதம்முதல்ஆதார் அடிப்படையிலானபணப் பரிவர்த்தனை முறை அமல்படுத்தப்பட்டுள்ளதாகவும், உதவித்தொகை தொடர்பான சந்தேகங்கள் மற்றும் வழிகாட்டுதல்களுக்கு மாவட்டம் மற்றும் வட்ட அளவில் அமைக்கப்பட்டுள்ளஉதவிமையங்களை அணுகலாம் என்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் வந்தனா கார்க் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்துஅவர்வெளியிட்டுள்ள தகவலில், இந்திய அரசின் அறிவுறுத்தலின்படி திருவண்ணாமலை மாவட்டத்தில் சமூக பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் உதவித்தொகை பெறும் பயனாளிகளுக்கு செப்டம்பர் மாதம் முதல் ஆதார் அடிப்படையிலான பணப்பரிவர்த்தனை முறை நடைமுறைக்கு வந்துள்ளது. இதன்படி, பயனாளிகளுக்கான மாதாந்திர உதவித்தொகை அவர்களின் ஆதார் எண்ணுடன் இணைக்கப்பட்ட வங்கிக் கணக்கில் நேரடியாக வரவு வைக்கப்படும்.

அனைத்து பயனாளிகளுக்கும் அரசின் முறையான நடவடிக்கைகள் மூலம் உதவித்தொகை எவ்வித தடையுமின்றி சென்றடைவதை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இது வரை வங்கிக் கணக்குடன் ஆதார் எண்ணை இணைக்காத பயனாளிகள், தங்களது வங்கியை அணுகி ஆதார் எண்ணை வங்கிக் கணக்குடன் இணைத்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

மேலும், ஆதார் இணைப்பு மற்றும் உதவித்தொகை தொடர்பாக ஏதேனும் சந்தேகம் அல்லது உதவி தேவைப்படும் பயனாளிகள், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) பிரிவு மற்றும் ஒவ்வொரு வட்டாட்சியர் அலுவலகத்திலும் உள்ள தனிவட்டாட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) பிரிவில் அமைக்கப்பட்டுள்ள உதவி மையங்களை அணுகலாம்.

இந்த உதவி மையங்களில் பயனாளிகளுக்கு தேவையான வழிகாட்டுதல்கள் மற்றும் உதவிகள் வழங்கப்படும். ஒவ்வொரு பயனாளிக்கும் மாதாந்திர உதவித்தொகை எவ்வித இடையூறும் இன்றி சீராக சென்றடைவதை உறுதி செய்வதில் அரசு உறுதியாக உள்ளது என மாவட்ட ஆட்சித் தலைவர் வந்தனா கார்க் தெரிவித்துள்ளார்.

## இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் ந.ப்ரியா ரவிச்சந்திரன் தலைமையில்

# மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் செயல்பாடுகள் குறித்து மாதாந்திர ஆய்வுக் கூட்டம்



இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.ந.ப்ரியா ரவிச்சந்திரன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் செயல்பாடுகள் குறித்து மாதாந்திர ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.ந.ப்ரியா ரவிச்சந்திரன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் இன்று (24.9.2026) மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் செயல்பாடுகள் குறித்து மாதாந்திர ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் குழந்தை இறப்பு விகிதம், தாய்மை இறப்பு விகிதம், இளம் வயது கர்ப்பம், பிறப்பு பாலின விகிதம் உள்ளிட்டவை குறித்து விரிவாக ஆய்வு செய்யப்பட்டது.

மேலும், டெங்கு காய்ச்சல் பரவலைத் தடுக்க மேற்கொள்ள வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள், கொசு ஒழிப்புப் பணிகளை தீவிரப்படுத்துதல், பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துதல் மற்றும் அனைத்து துறைகளும் ஒருங்கிணைந்து செயல்படுதல் குறித்து அறிவுரைகள் வழங்கப்பட்டது.

மாவட்டத்தில் பொதுச் சுகாதார குறியீடுகளை மேம்படுத்தவும், தாய் சேய் நலனை உறுதி செய்யவும், அனைத்து துறைகளும் ஒருங்கிணைந்து தொடர்ந்து செயல்பட வேண்டும் என அறிவுரைகள் வழங்கப்பட்டது.

மேலும், செப்டம்பர் 28 அன்று தாய் மாமன் தங்க மோதிரம் திட்டம் செயல்படுத்துதல் குறித்து துறைச் சார்ந்த அலுவலர்களுடன் ஆலோசனைகள் வழங்கப்பட்டது.

இக்கூட்டத்தில் இணை இயக்குனர் மருத்துவ பணிகள் மரு.சரவணகுமார். மாவட்ட சுகாதார அலுவலர் மரு.செந்தில்குமார், துணை இயக்குநர்கள் மரு. ஜெயஸ்ரீ (காசநோய்), மரு. ப்ரீத்தி (தொழுநோய்), மரு. மணிமேகலை (குடும்ப நலம்) மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



**திண்டுக்கல் மாவட்டம் சாணார்பட்டி அருகே அஞ்சு குளிப்பட்டி சேர்ந்த அழகர்சாமி என்ற 19 வயது வாலிபர் தூக்கிட்டு தற்கொலை சம்பவத்தை குறித்து சாணார்பட்டி போலீசார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்**

அருணாசலேஸ்வரர் கோயிலில் மீண்டும் யானை பிளிறல்:

# 10 ஆண்டுகளுக்குப் பிறகு கோயில் வளாகத்திற்கு வரும் 8 வயது ஹிராலால்; ரூ.42 லட்சத்தில் பிரமாண்ட வசதிகள்

திருவண்ணாமலை,செப்.25

திருவண்ணாமலை அருணாசலேஸ்வரர் கோயிலில் சுமார் 10 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் யானையின் பிளிறல் ஒலிக்க உள்ளது. கோயில் வளாகத்தில் தங்குவதற்காக 8 வயதுடைய ஆண் யானையான ஹிராலால் சாலை மார்க்கமாக திருவண்ணாமலைக்கு அழைத்து வரப்பட உள்ளது. இதையொட்டி, யானையை பாதுகாப்பாக தங்க வைத்து பராமரிப்பதற்காக ரூ.42 லட்சம் மதிப்பில் பல்வேறு சிறப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.



அருணாசலேஸ்வரர் கோயிலில் நீண்ட காலமாக பக்தர்களின் கவனத்தை ஈர்த்த ருக்மணி யானை, கடந்த 2018ம் ஆண்டு மார்ச் மாதம் காயம் காரணமாக உயிரிழந்தது. அதன்பிறகு கோயில் வளாகத்தில் யானை இல்லாத நிலை நீடித்து வந்தது. தற்போது புதிய யானை வர உள்ளதால், கோயிலின் பாரம்பரியத்துக்கு மீண்டும் புத்துயிர் கிடைக்க உள்ளது.

தமிழக கோயில்களுக்கு யானைகளை வழங்க வேண்டும் என்ற தமிழக அரசின் கோரிக்கையை ஏற்று, அசாம் அரசு 5 யானைகளை தமிழக கோயில்களுக்கு வழங்க ஒப்புதல் அளித்துள்ளது. அதன்படி, திருவண்ணாமலை அருணாசலேஸ்வரர் கோயிலுக்கு ஹிராலால் (8 வயது) மற்றும் சிவா (6 வயது) என 2 யானைகள் வழங்கப்பட உள்ளன. இதில் ஹிராலால் முதற்கட்டமாக திருவண்ணாமலைக்கு அழைத்து வரப்பட உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

யானைக்காக சிறப்பு நீச்சல் குளம்

யானையை கோயில் வளாகத்தில் பாதுகாப்பாக தங்க வைத்து பராமரிப்பதற்காக சிறப்பு ஏற்பாடுகள்செய்யப்பட்டு வருகின்றன. அதன் ஒரு பகுதியாக சுமார் 1,600 சதுர அடி பரப்பளவில் நீச்சல் குளம் அமைக்கப்படுகிறது. குறைந்தபட்சம் 5 அடி ஆழம் கொண்டதாக அமைக்கப்படும் இந்த குளத்தில் யானை எளிதாக இறங்கி குளிப்பதற்கும் வெளியேறுவதற்கும் சரிவுப் பாதைகள் அமைக்கப்படுகின்றன. மேலும், வெயிலின் தாக்கத்தில் இருந்து யானையை பாதுகாக்க நீச்சல் குளத்தின் அருகே 10 ஷவர்கள் அமைக்கப்பட உள்ளன.

சேற்றுக் குளியலுக்கும் தனி இடம்

யானையின் இயற்கையான பழக்கவழக்கங்களை கருத்தில் கொண்டு, கோயில் வளாகத்தில் சுமார் 100 சதுர அடி பரப்பளவில் தனி திறந்தவெளி பகுதி உருவாக்கப்படுகிறது. இந்த பகுதியில் யானை சேற்றுக் குளியல் எடுக்க வசதி செய்யப்பட உள்ளது.

இந்த நீச்சல் குளம், ஷவர்கள், சேற்றுக் குளியல் பகுதி உள்ளிட்ட பணிகள் அனைத்தும் நிறுவனங்களின் சமூகப் பொறுப்பு நிதி மூலம் மேற்கொள்ளப்படுகின்றன. இதற்காக சுமார் ரூ.42 லட்சம் செலவிடப்படுகிறது.

அசாம் பாகன்கள் வருகை

ஹிராலாலை சிறப்பாக பராமரிப்பதற்காக அசாம் மாநிலத்தைச் சேர்ந்த சிறப்பு பாகன்கள் குழுவினர், உள்ளூர் பாகன்களுக்கு உதவ உள்ளனர். யானையின் உணவு, பராமரிப்பு மற்றும் உடல்நலம் உள்ளிட்ட அனைத்து அம்சங்களிலும் சிறப்பு கவனம் செலுத்தப்பட உள்ளது. மேலும், யானையின் உடல்நிலையை தொடர்ந்து கண்காணிக்க கால்நடை மருத்துவக் குழுவும் பணியில் ஈடுபடுத்தப்பட உள்ளது.

பக்தர்கள் பார்வையிட அனுமதி

கோயில் வளாகத்தில் தங்க வைக்கப்படும் ஹிராலால் யானையை பக்தர்கள் பார்வையிட அனுமதிக்கப்பட உள்ளனர். அதே நேரத்தில், யானை தங்கும் மற்றும் ஓய்வெடுக்கும் பகுதியைச் சுற்றி பக்தர்களின் பாதுகாப்பை உறுதி செய்ய தேவையான தடுப்பு மற்றும் முன்னெச்சரிக்கை ஏற்பாடுகள் செய்யப்பட உள்ளன.

ருக்மணிக்குப் பிறகு ஹிராலால்

கடந்த 1995ம் ஆண்டு முதுமலை வனப்பகுதியில் இருந்து 7 வயது குட்டி யானையாக ருக்மணி அருணாசலேஸ்வரர் கோயிலுக்கு கொண்டு வரப்பட்டது. சுமார் 27 ஆண்டுகள் கோயிலில் தங்கி பக்தர்களின் மனதில் நீங்கா இடம்பிடித்த ருக்மணி, 2018ம் ஆண்டு உயிரிழந்தது.

அதன்பிறகு சுமார் 10 ஆண்டுகளாக கோயில் வளாகத்தில் யானை இல்லாத நிலையில், தற்போது 8 வயது ஹிராலாலின் வருகை பக்தர்கள் மத்தியில் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது. அருணாசலேஸ்வரர் கோயில் வளாகத்தில் மீண்டும் யானையின் பிளிறல் ஒலிக்க உள்ளதால், கோயிலின் பாரம்பரியத்துக்கு புதிய அத்தியாயம் தொடங்க உள்ளது.

தேச பக்தி நாளிதழில் அனுபவம் உள்ள செய்தியாளர்கள், போட்டோகிராபர்கள், தாலுகா செய்தியாளர்கள் தேவை
தமிழகம் மற்றும் புதுச்சேரி ஆகிய மாநிலங்களில் மாவட்ட மற்றும் தாலுகா வாரியாக அனுபவம் உள்ள பத்திரிக்கை துறையில் சாதிக்க விரும்பும் ஆண் ,பெண் நிருபர்கள் தேவை
G.ராஜா ஆசிரியர்: 9842364068
செய்தி மற்றும் விளம்பர தொடர்புக்கு
R.கண்ணன் இணைஆசிரியர்: 9994422779

100 ஆண்டுகளாக மக்களின் தாகம் தீர்த்த 2 தெருக்கிணறுகள்:

# இன்று பயன்பாடின்றி ஆபத்தான நிலையில் - பாதுகாப்பு வேலி அமைக்க மேல்பாலூர் மக்கள் கோரிக்கை

திருவண்ணாமலை:செப்.25

திருவண்ணாமலை மாவட்டம் கலசப்பாக்கம் அருகே மேல்பாலூர் கிராமத்தில் மூன்று தலைமுறைகளுக்கும் மேலாக பொதுமக்களின்குடிநீர்தேவையை பூர்த்தி செய்த இரண்டு பழமையான தெருக்கிணறுகள் தற்போது சுமார் 20 ஆண்டுகளாக பயன்பாடின்றி உள்ளன. வரலாற்றுச் சின்னங்களாக கம்பீரமாக காட்சியளிக்கும் இந்தக் கிணறுகளுக்கு பாதுகாப்பு ஏற்படுத்த வேண்டும் என கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கலசப்பாக்கம் தொகுதிக்கு உட்பட்ட மேல்பாலூர் கிராமம் இயற்கை எழில் சூழ்ந்த பகுதியாகவும், விவசாயத்திற்கு பெயர் பெற்ற கிராமமாகவும் விளங்கி வருகிறது. இங்கு ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் வசித்து வருகின்றனர்.

இக்கிராமத்தில் உள்ள மாரியம்மன் கோவில் தெரு மற்றும் அதனை ஒட்டியுள்ள மற்றொரு தெருவில், சுமார் 100 ஆண்டுகளுக்கு முன்பு அப்பகுதி மக்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்வதற்காக இரண்டு தெருக்கிணறுகள் அமைக்கப்பட்டதாக கூறப்படுகிறது.

சுமார் 40 அடி ஆழம் கொண்ட இந்தக் கிணறுகளில் அக்காலத்தில் ராட்டினம் பொருத்தப்பட்டிருந்தது. இதன் மூலம் பொதுமக்கள் கிணற்றில் இருந்து தண்ணீரை எடுத்து குடிநீராக பயன்படுத்தி வந்துள்ளனர். மேலும், கிணற்றுத் தண்ணீர் சுவையாகவும், இளநீரைப் போன்ற தன்மையுடனும் இருந்ததாக அப்பகுதி மக்கள் பழைய நினைவுகளை பகிர்ந்து வருகின்றனர்.



மின்மோட்டார், ஆழ்துளைக் கிணறு உள்ளிட்ட நவீன குடிநீர் வசதிகள் இல்லாத காலத்தில், இந்த இரண்டு தெருக்கிணறுகளும் மேல்பாலூர் மக்களின் அன்றாட வாழ்க்கையில் முக்கிய பங்கு வகித்துள்ளன.

மூன்று தலைமுறைகளுக்கும் மேலாக பொதுமக்களின் குடிநீர் தேவையை தடையின்றி பூர்த்தி செய்த இந்தக் கிணறுகள் ஏறத்தாழ 100 ஆண்டுகள் வரை பயன்பாட்டில் இருந்ததாக கூறப்படுகிறது.

காலப்போக்கில் கிராமத்தில் குடிநீர் வழங்குவதற்கான புதிய வசதிகள் ஏற்படுத்தப்பட்டதால், கடந்த சுமார் 20 ஆண்டுகளாக இந்த இரண்டு கிணறுகளும் பயன்பாடின்றி காணப்படுகின்றன. தற்போது கிணறுகளில் தண்ணீர் பயன்பாடு இல்லாத நிலையில், அவை பழமையான நினைவுச் சின்னங்களைப் போன்று காட்சியளிக்கின்றன.

இந்நிலையில், கிணறுகள் அமைந்துள்ள பகுதிகளில் ஏராளமான வீடுகள் உள்ளதால், அவற்றின் அருகே பொதுமக்கள் மற்றும் குழந்தைகள் சென்று வருகின்றனர். மேலும், ஆடு, மாடு, கோழி உள்ளிட்ட கால்நடைகளும் அந்தப் பகுதிகளில் நடமாடுகின்றன. இதனால் எதிர்பாராதவகையில்யாரேனும்கிணற்றுக்குள் தவறி விழுந்து அசம்பாவிதம் ஏற்படும் அபாயம் இருப்பதாக அப்பகுதி மக்கள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

எனவே, பயன்பாடின்றி உள்ள இந்த இரண்டு பழமையான கிணறுகளை பாதுகாப்பாக மூட வேண்டும் அல்லது அவற்றின் வரலாற்றுச் சிறப்பைபாதுகாக்கும்வகையில்கிணறுகளைச் சுற்றிலும் இரும்பு பாதுகாப்பு வேலி அமைக்க வேண்டும் என்பது அப்பகுதி மக்களின் நீண்ட கால கோரிக்கையாக உள்ளது.

இதுகுறித்து சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள், ஊராட்சி நிர்வாகம் மற்றும் மாவட்ட நிர்வாகம் நேரில் ஆய்வு செய்து, நூறு ஆண்டுகளுக்கும் மேலாக கிராம மக்களின் வாழ்க்கையுடன்இணைந்துள்ளஇந்தஇரண்டு பழமையான கிணறுகளை பாதுகாப்பதுடன், பொதுமக்களின் பாதுகாப்பையும் உறுதி செய்யும் வகையில் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என மேல்பாலூர் கிராம பொதுமக்கள், சமூக ஆர்வலர்கள் மற்றும் இளைஞர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.





# பழனியில் அடிவாரம் சோழிய வேளாளர் சங்கம் சார்பாக, 47 ஆம் ஆண்டு மகாசபை கூட்டம், கல்வித் திருவிழா

பழனியில் அடிவாரம் சோழிய வேளாளர் சங்கம் சார்பாக, 47 ஆம் ஆண்டு மகாசபை கூட்டமும், கல்வித் திருவிழாவும் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு அடிவாரம் சோழிய வேளாளர் சங்கத் தலைவர் அசோக்பெருமாள் தலைமை வகித்தார். செயலாளர் கார்த்திக்கேயன், பொருளாளர் செல்லப்பாண்டி, ரவிச்சந்திரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். முன்னாள் கவுன்சிலர் சுந்தர், சுவாமி விலாஸ் முருகேசன், எம்.எஸ்.குகன், மீனாட்சி ராஜன், ஆகியோர் வரவேற்புரை ஆற்றினர்.நிகழ்ச்சியில் சரவண பொய்கை கந்த விலாஸ் பாஸ்கரன், பேச்சியம்மன் ரைஸ் மில் சுப்பிரமணி, ஆயக்குடி ஜெயக்குமார், ரமேஷ் குமார், நோட்டரி வழக்கறிஞர்கள் செந்தில்குமார், குமரேசன், அங்குராஜ் மற்றும் நாட்ராயசாமி, துர்கா கணேசன், சுராங்கனி கணேசன், கவுன்சிலர் ஆறுமுகம், மானூர் ரமேஷ், பாண்டிய வேளாளர் சங்க முருகன், மீனம் சிவகுமார், சரண்ராஜ், சண்முகநாதன், எஸ் கே பாபு, பேன்சி பாலு, ஒர்க் ஷாப் பாலு, ஆர் எம் டி சி கதிர்வேல், என்பிஎஸ் சுப்புராஜ், ஆசிரியர் ராஜபாண்டியன், அதிமுக சரவணன், பாபு, குகன், ராம் பாபு பாலசமுத்திரம் முருகானந்தம், உட்பட ஏராளமான ஒரு கலந்து கொண்டனர்

**இறப்புக்கு முன் ரத்த தானம்**
**இறப்புக்கு பின் கண் தானம்**

வன்னிவேடு சமூக நாய்கள் இனப்பெருக்கக் கட்டுப்பாட்டு மையத்திலும்..

# ஆடு, மாடு அறுக்கும் தொட்டிகளில் பிராணிகள் நல வாரிய உறுப்பினர்கள் திடீர் ஆய்வு

ராணிப்பேட்டை மாவட்ட கால்நடை பராமரிப்புத்துறை இணை இயக்குனர் டாக்டர் திருமாறன் மற்றும் பிராணிகள் நல அலுவலர் டாக்டர் வினோத்குமார் ஆகியோர் வாலாஜா பேட்டை நகராட்சி பகுதிகளில் உள்ள ஆடு, மாடு அறுக்கும் தொட்டிகளில் திடீர் ஆய்வு மேற்கொண்டனர்.

இந்த ஆய்வின்போது ஆடு, மாடு அறுக்கும் தொட்டிகளின் கட்டமைப்பு, சுகாதார வசதிகள் மற்றும் பராமரிப்பு நிலை குறித்து அதிகாரிகள் நேரில் பார்வையிட்டனர். பழுதடைந்துள்ள பகுதிகளில் தேவையான மராமத்து மற்றும் பராமரிப்பு பணிகளை மேற்கொண்டு, அறுக்கும் தொட்டிகளை முறையாக பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும் என அறிவுறுத்தினர்.

மேலும், வாலாஜா பேட்டை நகராட்சி பகுதியில் உள்ள மாடு அறுக்கும் கடைகளின் உரிமையாளர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்திய அதிகாரிகள், மாடுகளை பொதுமக்கள் நடமாட்டம் உள்ள பகுதிகளில்அறுக்காமல், நகராட்சி நிர்வாகத்தால் ஏற்படுத்தப்பட்டுள்ள மாடு அறுக்கும் தொட்டியிலேயே அறுக்க வேண்டும் என அறிவுறுத்தினர்.

மாடு அறுக்கும் தொட்டிகளை முறையாக பயன்படுத்துவதன் மூலம் சுகாதார சீர்கேடு ஏற்படுவதையும்,இறைச்சிக் கழிவுகள் பொதுமக்கள்வசிக்கும்பகுதிகளில் கொட்டப்படுவதையும் தவிர்க்க முடியும். இதற்காக நகராட்சி நிர்வாகத்துடன் இணைந்து தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

சமூக நாய்கள் இனப் பெருக்கக் கட்டுப்பாட்டு மையத்தில் ஆய்வு

இதனைத் தொடர்ந்து வாலாஜாபேட்டை வன்னிவேடு பகுதியில் அமைந்துள்ள கால்நடை மருத்துவமனையில் செயல்பட்டு வரும் சமூக நாய்கள் இனப்பெருக்கக் கட்டுப்பாட்டு மையத்தையும் டாக்டர் திருமாறன் மற்றும் டாக்டர் வினோத்குமார் ஆகியோர் ஆய்வு செய்தனர்.

அங்கு சமூக நாய்களுக்கு மேற்கொள்ளப்பட்டு வரும் இனப்பெருக்கக் கட்டுப்பாட்டு அறுவைச் சிகிச்சை பணிகள், அறுவைச் சிகிச்சைக்கு பின்னர் வழங்கப்படும் உணவு, மருத்துவ சிகிச்சை மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து அதிகாரிகள் ஆய்வு மேற்கொண்டனர்.

அப்போது ராணிப்பேட்டை நகராட்சி மற்றும் சோளிங்கர் பகுதிகளில் இருந்து கொண்டு வரப்பட்ட சமூக நாய்களுக்கு இனப்பெருக்கக் கட்டுப்பாட்டு அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டிருந்ததை பார்வையிட்டனர்.

அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளப்பட்ட சமூக நாய்களுக்கு உரிய பாதுகாப்பான இடவசதி, தேவையான உணவு மற்றும் மருத்துவ பராமரிப்பு வழங்க வேண்டும் என்றும், அறுவைச் சிகிச்சைக்குப் பின்னர் அவற்றின் உடல் நிலை சீராகும் வரை முறையாக கண்காணிக்க வேண்டும் என்றும் அதிகாரிகள் அறிவுறுத்தினர்.



மேலும், அறுவைச் சிகிச்சை மற்றும் தேவையான மருத்துவ பராமரிப்பு முடிந்த பின்னர், சமூக நாய்கள் பிடிக்கப்பட்ட அதே இடத்திலேயே மீண்டும் விடப்பட வேண்டும் என்றும் அறிவுறுத்தினர்.

இந்த ஆய்வின்போது பிராணிகள் நலவாரிய உறுப்பினர்கள்,வாலாஜா பேட்டை நகராட்சி ஆணையாளர் மேகலா, நகராட்சி பொறியாளர் சண்முகம், சுகாதார ஆய்வாளர் தட்சிணாமூர்த்தி, ராணிப்பேட்டை நகராட்சி ஆணையாளர் செந்தில் குமார், வட்டார வளர்ச்சி அலுவலர் பிரபாகரன் மேலும் போக்குவரத்து துறை அலுவலர், வட்டார கல்வி அலுவலர் உள்ளிட்ட அதிகாரிகள் உடனிருந்தனர்.

ஆடு, மாடு அறுக்கும் தொட்டிகளை முறையாக பராமரித்தல், இறைச்சிக்கடை உரிமையாளர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துதல் மற்றும் சமூக நாய்களுக்கான இனப்பெருக்கக் கட்டுப்பாட்டு பணிகளை முறையாக மேற்கொண்டு அவற்றை பாதுகாப்பாக பராமரித்தல் உள்ளிட்ட பணிகள் குறித்து அதிகாரிகளுக்கு தேவையான அறிவுரைகள் வழங்கப்பட்டன.

Printed by S.BALASUBRAMANIAN and Published by M.VEERAMANI on behalf of M.VEERAMANI, Printed at "SANKARJI COMPUTER GRAPHICS PRINTER", No. 8/31, Seegampatty, K.Pudupatty (Post), Kulithalai (Taluk) Karur (District) - 639 105, Published At No. 1080. Kattupatti Road. Viralimalai (Taluk), Pudukkottai (District)-621316 EDITOR: GRAJA